ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நூதன

குழந்தைகள் தாலாட்டு.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 கானத்தியப்ப முதலிவீதி, மதரூஸ். என். சி.

ஸ்ரீ ராமஜெயம்.

நூதனகுழந்தைகள் தாலாட்டு.

சீரார்செல்வச் சிறுபிள்ளை தாலாட்டு
பாரார்மகிழப் பாடுதற்கு - நீரார்
வேணியாநம்பிலையும் வைத்துவிளையாடுகின்ற
ஆனைமுகன் றுளென் அணி.

ஆராரோ ஆராரோ ஆரிரோ ஆராரோ
சீராருமெங்கள்குல சிகாமணியே ஆராரோ

கண்ணே நவமணியே
கற்பகமே முக்கனியே
என்னுர் உயிரானே
இந்திரனே கண்வளராய். 1
கொட்டிவைத்த முத்தே
குவிந்தநவ ரத்தினமே
கட்டிப்பசும்பொன்னே என்
கண்மணியே நித்திரைசெய். 2
நித்திரைசெய் நித்திரைசெய்
நெடியபுவி மன்னவனே
சித்திரப்பூந் தொட்டிலிலே
சிகாமணியே நித்திரைசெய். 3
கரும்புரசமே என்
கசக்காத முக்கனியே
அரும்பா மலர்மணியே
அறுமுகனே கண்வளராய். 4

மாத்துயர்ந்த பொன்னே யிந்த
மண்டலத்து அதிபதியே
பூத்தபுதுமலரே என்
பொக்கிஷமே கண்வளராய் 5
மருவே மருக்கொழுந்தே
மலர்விரிந்த மல்லிகையே
குருவேரரும்பே என்
குலக்கொழுந்தே கண்வளராய். 6
கிள்ளைக்குயில்மொழியே நான்
கண்டெடுத்த பொக்கிஷமே
பிள்ளைகலி தீர்க்கவந்த
பெருமானே கண்வளராய். 7
மாயன் மகளார்க்கு
மாப்பிள்ளையாய் வந்தவனே
தாய்சொல் தவராத
தனஞ்சயனார் நீதானே. 8
சீதைக் கதிபதியோ
சிலையேந்தும் ரகுபதியோ
தந்தைசொல் தட்டாத
தருமதுரை நீதானே 9
ஒருமாங் கனிக்காக
உலகவலம் செய்துவந்த
பெருமாள் மருமகனே
பெண்ரதிக்கு மாப்பிள்ளையோ. 10

கரும்புக் கணையானே
கன்னிவள்ளி நாயகனே
பரமன்றனை யடித்த
பாண்டியனார் நீதானே. 11

ஆரடித்து நீயழுதாய்
அழுதகண்ணில் நீர்தளும்ப
பேரையுரைத்தாக்கால் நான்
பெருவிலங்கு பூட்டிடுவேன். 12

அத்தையடித்தாளோ உனக்கு
அமுதூட்டுங் கையாலே
சற்றே மனம்பொறுத்து
சந்திரனே கண்வளராய். 13

பாட்டியடித்தாளோ உன்னை
பால்வார்க்குங் கையாலே
கூப்பிட்டு நான்கேட்பேன்
குஞ்சரமே கண்வளராய் 14

மாமியடித்தாளோ உனக்கு
மைதீட்டுங் கையாலே
சாமிமனம் பொறுத்து
சண்முகனே கண்வளராய். 15

தமையனடித்தானோ உன்னை
தயிரூட்டுங் கையாலே
நிமிஷம் மனம்பொறுத்து
நித்திரைசெய் கோமானே. 16

அக்காளடித்தாளோ உங்கள்
அம்மான்மார் வைதாரோ
மிக்காகத் தேம்புவதேன்
வித்தகனே கண்வளராய் 17

பெரியாயி தப்பிதமோ உன்னை
பெற்றாளடித்ததுண்டோ
அறியாமற்செய்தாலும் எங்கள்
ஆரமுதே கண்வளராய் 18

அழாதேஅழாதே எங்கள்
அரசே அழாதேநீ
கொழுவார் பலரிருக்க
துரையேநீ கண்வளராய் 19

ஆம்பல் மலர்போலே
அடிக்கடிநீ வாய்திறந்து
தேம்பியழாதே நீ
தினகரனே கண்வளராய். 20

நீராட்டி மைதீட்டி
நிலாக்காட்டி பொட்டுமிட்டு
சீராட்டும் வேளையல்லோ
சித்தசனே கண்வளராய் 21

அந்திநிலாக்காட்டி உனக்கு
அமுதூட்ட வேணுமல்லோ
மைந்தன் கலிதீர்த்த
மந்திரியே கண்வளராய் 22

வாடாதப் பூவே
வானுலகின் தாராவே
தேடாதபொன்னே என்
திரவியமே கண்வளராய். 23
துரைமுகத்து வியாபாரி
துரைமார்கள் உங்களம்மான்
திரவியங்க ளெண்கோடி
தேடிவைப்பார் கண்வளராய். 24
கப்பத் துரைமுகத்தார்
கனசாலி உங்களம்மான்
பொற்பணிகள் கொண்டுவந்தார்
புண்ணியனே கண்வளரய். 25
கோட்டை யதிகாரி
கொடிகார ருங்களம்மான்
கலியுகந் தன்னிலே
கண்மணியே கண்வளராய். 26
ஆனைவிற்கும் வர்த்தகர்கள்
அதிகாரர் உங்களம்மான்
சேனைத்தலைவரதோ உங்கள்
சின்னண்ணு வந்தார்காண். 27
பட்டு ஜவுளிகளும்
பலபணியுங் கொண்டுவந்தார்
கட்டி யலங்கரிப்பார்
கற்பகமே கண்வளராய். 28

கோட்டைப் புதுலேஞ்சி
கொடிமதுரைப் பட்டுகளும்
பாட்டனர் கொண்டுவந்தார்
பாக்கியமே கண்வளராய். 29

பொம்பாயிப் பட்டு
புதுக்கோட்டை லேஞ்சிகளும்
அம்மான்மார் கொண்டுவந்தார்
அணுப்போது கண்வளராய். 30

பொன்னு லெழுத்தாணி
பட்டோலைப் புத்தகமும்
சின்னண்ணு கொண்டுவந்தார்
சிறுபொழுது கண்வளராய். 31

சோமனொளி போலே
சோதிமிகும் பாதசரம
மாமனர் கொண்டுவந்தார்
மதிபதியே கண்வளராய். 32

மின்னற் கொடிபோலே
மாற்றுயர்ந்த பொன்னரைஞாண்
அண்ண ரளிப்பார்காண்
அர்ச்சுனனே கண்வளராய். 33

சின்னஞ்சிறு விரல்களுக்கு
சித்திரம்போல் மோதிரங்கள்
பொன்னு லுனக்களிப்பேன்
புரந்தரனே கண்வளராய். 34

பாங்கிமார் கையேந்தி உனக்கு
பணிபூட்டத் தாலாட்டி
தாங்கி முலேக்கொடுப்பார்
தனஞ்சயனே கண்வளராய். 35

வஞ்சிமார் கையேந்தி
வகைவகையாய்த் தாலாட்டி
கொஞ்சி முலேக்கொடுப்பார்
குமரேசா கண்வளராய். 36

வட்டக் கலசமது
வாய்நிறம்பப் பாலருந்தி
இட்டசிறு தொட்டிலிலே
இந்திரனே கண்வளராய். 37

தந்தை மனங்குளிர உன்
தாய்மார் சீராட்ட
மைந்தன் கலிதீர்த்த
மன்னவனே கண்வளராய். 38

தெள்ளுதமிழ் சிறுமணவூர்
திகழுமுனி சாமியின்சொல்
பிள்ளைத்தா லாட்டுரைப்பேன்
பெற்றவனே கண்வளராய். 39

நூதனகுழந்தைகள் தாலாட்டு,
முற்றிற்று.

———